## Official Spokesperson’s response to media queries on comments on India by USCIRF

July 02, 2022

---

# சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஐ.நா ஆணையத்தின் (USCIRF) இந்தியாவைப் பற்றிய கருத்துக்கள் தொடர்பாகசெய்தியாளர்களின் கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளரின் பதில்

ஜூலை 02, 2022

**சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஐ.நா ஆணையத்தின் (USCIRF) இந்தியாவைப் பற்றிய கருத்துக்கள் தொடர்பாகசெய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் திரு அரிந்தம் பக்ச்சி கூறியதாவது:**

"சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஐ.நா ஆணையம் (USCIRF) வெளியிட்ட இந்தியாவைப் பற்றிய பாரபட்சமான மற்றும் தவறான கருத்துக்களை நாங்கள் பார்த்துள்ளோம்.

இக்கருத்துக்கள் இந்தியா மற்றும் அதன் அரசியலமைப்புச் சட்டம், அதன் பன்முகத்தன்மை மற்றும் அதன் ஜனநாயக நெறிமுறைகள் பற்றி சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஐ.நா ஆணையம் (USCIRF) அது தீட்டிய திட்டத்திற்கு இணங்க அதன் அறிக்கைகள் மற்றும் தகவல்களில் மீண்டும் மீண்டும் உண்மைகளை திரித்து எங்களைப் பற்றி தவறான பிம்பத்தை பரப்பிவருகிறது. இத்தகைய நடவடிக்கைகள் அந்த அமைப்பின் நம்பகத்தன்மை மற்றும் பாரபட்சமின்மை பற்றிய சந்தேகங்களை வலுப்படுத்தவே செய்யும்."

**புதுடெல்லி**
ஜூலை 02, 2022

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.